


# ஆர்மீனிய இனப் படுகொலை

## நினைவு கூருதலும் வலியுறுத்தலும்

**இனப்படுகொலைக்குள்ளான ஒரு சமூகம், நடந்தது 'இனப்படுகொலை' என்று உலகம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்காக நடத்தும் போராட்டம் இனப்படுகொலையிலும் வேதனை மிக்கதொன்று. இதுவரையிலும் கனடா யூதர், உக்ரெய்னியர், ஆர்மீனியர், ருவண்டா டுட்சி இனத்தவர் மீதான படுகொலைகளை மட்டுமே இனப்படுகொலை** (Genocide) **என்று ஏற்றுக்கொண்டிருக்கிறது.**

**ஆர்மீனிய இனப்படுகொலையின் நூற்றாண்டு நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் ஆர்மீனிய இனப்படுகொலையின் பின்னணியையும் படுகொலையின் வீச்சையும் கொஞ்சம் பார்ப்போம்.**

- கந்தசாமி கங்காதரன் -

ஆர்மீனியா, சோவியத்யூனியன் உடைந்து போனபோதுதான் பலரும் முதன் முதலாக அந்தப் பெயரையே கேள்விப் பட்டோம். 1922 – 1991 வரையில் சோவியத் யூனியனின் 15 குடியரசுகளில் ஒன்றாக அடக்கி ஒடுக்கப்பட்டு அடையாளம் மறுக் கப்பட்ட தேசமாக ஆர்மீனியா இருந்திருக்கிறது. நவீன உலகில் 1991 க்குப் பிறகுதான் பரவலாக அறியப்பட்டது. ஆர்மீனியருக்கும் யூதர், எகிப்தியர், சீனர், தமிழர் போன்று மிகத் தொன்மையான வரலாறும் இலக்கியச் செழுமையும் இருக்கிறது. 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகரிகம் தழைத் தோங்கிய, இன்றைய துருக்கியின் கிழக்கிலுள்ள அறாறற் மலையைச் (Mt. Ararat) சுற்றி பரந்து விரிந்த பிரதேசமாக இருந்திருக்கிறது. அதனால் இன்றளவிலும் அறாறற் மலை ஆர்மீனியத் தேசியத்தின் அடையாளமாகவே ஆர்மீனியர்களால் கருதப் படுகின்றது, கொண்டாடப்படுகிறது. அறாறற் மலைக்கு இன்னொரு சிறப்புமுண்டு. நோவாவின் பேழை அறாறற் மலையிலேயே தரித்ததாக பரிசுத்த வேதாகமம் (ஆதியாகமம் 8 : 4) கூறுகின்றது. கி.பி. 301ம் ஆண்டில் கிறிஸ்தவத்தைத் தழுவியதன் மூலம் அதிகாரபூர்வமாக கிறிஸ்தவத்தைத் தழுவிக் கொண்ட உலகின் முதலாவது நாடானது ஆர்மீனியா. ஆர்மீனியத் திருச்சபை ஆர்மீனியர்களுக்கு கிறிஸ்தவத் தலைமைப் பீடமாகச் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. ஆர்மீனியா கிறிஸ்தவத்தைத் தழுவி 12 ஆண்டுகளின் பின்னர்தான் ரோமப் பேரரசு கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டது.

ஆர்மீனிய அரசன் ஹைய்க் (Haik) பபிலோனிய அரசன் பெல் (Bel) என்பவனை கி.மு 2492ல் வெற்றிகொண்ட நிகழ்விலிருந்தே ஆர்மீனியர்களின் ஆண்டுக்கணக்குத் தொடங்குகிறது. பைசாந்தியர், பாரசீகர்கள் என மாறிமாறி பல ஆட்சியாளர்களைக் கண்டது ஆர்மீனியா. கி.பி 400களின் முற்பகுதியில், பாரசீகர்களின் ஆட்சியில் தமது வழிபாட்டுச் சுதந்திரம் மறுக்கப்பட்ட போது கிளர்ந்தெழுந்தனர் ஆர்மீனியர்கள். அதன் பிறகு அராபியர்களின் ஆளுமைக்குள் வந்து ஆர்மீனிய அமீரகம் (Emirate of Armenia) என்று அழைக்கப்பட்டது. கி.பி 884ல் அராபியப் பேரரசு வீழ்ச்சியடைந்து ஆர்மீனியா சுதந்திரமானது. மீண்டும் பைசாந்தியப் பேரரசு, ஜோர்ஜியப் பேரரசுகளின் ஆதிக்கத்தின் கீழிருந்த ஆர்மீனியா 13ம் நூற்றாண்டிலி

ருந்து 15ம் நூற்றாண்டுவரை மொகலாயரால் வெற்றி கொள்ளப்பட்டுப் பல மத்திய ஆசிய இனங்களால் ஆளப்பட்டு, சுரண்டப்பட்டு, வளங்கள் சூறையாடப்பட்டன. தொடர்ச்சியான படையெடுப்புகளாலும் ஆக்கிரமிப்புகளாலும் நலிந்துபோன ஆர்மீனியாவை 16ம் நூற்றாண்டில் ஒட்டோமன் பேரரசும் பாரசீகமும் பிடித்துக்கொண்டன. 17ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முதலாம் அப்பாஸ் என்பவன் துருக்கிய ஒட்டோமன் படைகளிடமிருந்து பின்வாங்கும்போது 300,000 ஆர்மீனியரை தனது படைகளோடு சேர்த்துக் கட்டாயமாக நடத்திச் சென்றான். இந்த மக்கள் இருந்த நகரங்கள், விளைநிலங்கள் எல்லாம் முன்னேறி வரும் எதிரிப்படைக்கு எதுவும் கிடைக்கக்கூடாதென்பதற்காக அழிக்கப்பட்டன. வலுக்கட்டாயமாகக் கொண்டு செல்லப்பட்ட 300,000 பேரில் பாதிப்பேரே உயிர்தப்பினர். பசியாலும் தாகத்தாலும் கடும் குளிரிலும் ஆற்று வெள்ளத்திலும் அகப்பட்டும் உயிரிழந்தனர்.

1720,30களில் நடைபெற்ற போர்களின் விளைவாக கிழக்கு ஆர்மீனியா பாரசீகர் வசமும் மேற்கு ஆர்மீனியா துருக்கியர் வசமும் போயின. 1826 – 1828 வரை நடைபெற்ற பாரசீக – ரஷ்யப் போரில் ரஷ்யா, பாரசீகர் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளை வென்றதோடு கிழக்கு ஆர்மீனியா ரஷ்யாவின் கைகளுக்குள் சென்றது. துருக்கிய ஆட்சிக்குட்பட்டிருந்த ஆர்மீனியர்களிலும் ரஷ்ய ஆட்சிக்குட்பட்டிருந்த ஆர்மீனியர் பாதுகாப்பாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்தனர். அடிக்கடி குர்து இனமக்களோடு சிறுமோதல்களும் தொடர்ந்தன. ஒட்டோமன் ஆட்சியில் ஆர்மீனியர்கள் தங்கள் குடும்பத்தில் நல்ல ஆரோக்கியமான ஓர் ஆண் பிள்ளையை அரசிடம் கொடுத்துவிடவேண்டும். அந்த மகன் இஸ்லாமியனாக மாற்றப்பட்டு, போர்க்காலமாயின் படைவீரனாகப் பயிற்றப்படுவான். சமாதான காலமாயிருந்தால் அரசு அதிகாரியாக்கப்படுவான். மதம்மாற மறுத்தால் மரணம்தான் பதில். 1839 இலிருந்து முதலாவது அப்துல் மஜீத் என்பவன் ஆட்சிசெய்தபோது ஆர்மீனியர்கள் ஓரளவு நிம்மதியாக வாழ்ந்தனர். ஆயினும் ஒட்டோமன் அரசு இஸ்லாமியர் அல்லாதோரிடம் மேலதிகமாக ஒரு வரியை அறவிட்டது.

ஒட்டோமன் பேரரசின் இன்றைய துருக்கியில் 2 மில்லியன் ஆர்மீனியர்கள் வாழ்ந்தனர். 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மத, கலாச்சார சுதந்திரம் அவர்களுக்கு வழங்கப்பட்டது வரி என்ற பெயரில் ஒரு மேலதிக கட்டணத்தோடு. என்னதான் சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தாலும், இரண்டாம் தரக் குடிமக்களாகவே நடத்தப்பட்டனர். முஸ்லிம்களுக்குச் சமனாக எங்குமே கிறிஸ்தவர்கள் மதிக்கப்பட்டதேயில்லை. சமத்துவம், அரசியல் உரிமைகளைக் கோரத் தலைப்பட்டனர் ஆர்மீனியர்கள். ‘சமத்துவம் அரசியல் உரிமைகள் வழங்கப்படும்’ என்ற உறுதிமொழி அடிக்கடி வழங்கப்பட்டபோதிலும் 1894 – 1896 வரையான 2 ஆண்டுகள் 300,000 வரையிலான ஆர்மீனியர்கள் கொல்லப்பட்டனர். கொன்றவர்கள் அரச படையினரும் கூலிப்படைகள் போன்ற குர்தியரும் ஆர்மீனியக் கிறிஸ்தவர்களின் அயலவராக இருந்து நட்பு பாராட்டிய முஸ்லிம்களுமே. கூடவே கிறிஸ்தவர்கள் என்பதற்காகவே அசீரியக் கிறிஸ்தவர்களும் 25,000 பேர்வரையில் இந்தக் காலகட்டத்தில் கொல்லப்பட்டனர். ஒட்டோமன் சுல்தான் 2ம் அப்துல் ஹமீத் தனது அதிகாரிகளுக்கும் படையினருக்கும், “ஆர்மீனியர்களையும் அசீரியர்களையும் கொன்றாலும் அது தண்டனைக்குரிய குற்றமாகாது” என அறிவித்திருந்தான்.

கொலைகள் ஒரு புறம்... அடையாள அழிப்பு மறுபுறம். அந்த இரண்டு ஆண்டுகளில் 328 தேவாலயங்கள், மடாலயங்கள் பள்ளிவாசல்களாக மாற்றப்பட்டன. 320 தேவாலயங்கள், மடாலயங்கள் இருந்த சுவடேயில்லாமல் அழிக்கப்பட்டன. 456 கிராமங்களில் வசித்தவர்கள் வலுக்கட்டாயமாக இஸ்லாத்துக்கு மதமாற்றம் செய்யப்பட்டனர். 2000 கிராமங்கள் அழிக்கப்பட்டன.


1908 துருக்கிப் புரட்சியின்போது அதிகாரிகளும் வெளிநாடுகளில் மறைந்திருந்த மிதவாதிகளும் ஒன்றுசேர்ந்தனர். சமஉரிமைகளும் சுதந்திர வாழ்வும் சிறுபான்மையினருக்கு வழங்கப்படுமென்ற வாக்குறுதியோடு ஆட்சியைக் கைப்பற்றினர். சொன்னது ஒன்று, செய்தது முற்றிலும் முரணான ஒன்று. புதிய ஆட்சியாளர்களை ஐரோப்பியர் இளம் துருக்கியர் (Young Turks) என்றழைத்தனர். ஒன்றிணைவுக்கும் அபிவிருத்திக்குமான குழு (The Committee for Union & Progress) என்று புதிய கட்சி தனக்குப் பெயர் சூடிக்கொண்டது. ‘துருக்கி துருக்கியருக்கே!’ என்பது அவர்களின் தாரகமந்திரம். இறைநம்பிக்கை இல்லாதோர் (காபிர்கள்) இல்லாத புதிய துருக்கியை உருவாக்க, தம்மை மிதவாதிகள் என்று சொல்லிக்கொண்ட மதவாதிகளும் அதிகாரிகளும் உறுதி பூண்டனர். இஸ்லாமியர் அல்லாதோர் எல்லோருமே இறைநம்பிக்கை இல்லாதோர் என்பது அவர்கள் வகுத்த வரையறை.

இன அழிப்பின் வேகத்தை அதிகரிக்க, ஆர்மீனியரைக் கொல்லும் துருக்கியருக்கோ குர்து இனத்தவருக்கோ வெகுமதியாக கொல்லப்பட்டோரின் அசையும், அசையாச் சொத்துகள் வழங்கப்படுமென இராணுவம் அறிவித்தது. தேடித்தேடிக் கொன்றனர் பேராசை பிடித்தோர்.

20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒட்டோமன் பேரரசு தன் ஆதிக்கத்தில் வைத்திருந்த பல்கேரியா, மொன்ரிநீக்ரோ, சேர்பியா போன்ற நாடுகளை இழந்தது. 1912/13ல் நடைபெற்ற பல்கன் போரிலும் பெரும்பாலான கிறிஸ்தவ தேசங்களை இழந்தது. அந்தக் கோபமும் துருக்கிப்பகுதியில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் மீது திரும்பியது. என்வர் பாஷா (இராணுவ அமைச்சர்), ஜமால் பாஷா (கடற்படை அமைச்சர்), தலாத் பாஷா (உள்துறை அமைச்சர்) ஆகிய 3 பாஷாக்களிடமே அதிகாரங்கள் குவிந்துகிடந்தன. மூவரும் சேர்ந்து நினைத்ததை நடத்தினர். இனவெறுப்பு தலாத் பாஷாவின் குருதியோடு கலந்திருந்தது.

1914ல் 1ம் உலகப்போரின்போது. ரஷ்யர்கள் கிழக்கிலிருந்து முன்னேறினர். மேற்கிலிருந்து இங்கிலாந்துப் படை நடவடிக்கைகள் தொடங்க கிறிஸ்தவ ஐரோப்பாவை நினைத்து துருக்கி பீதியடைந்தது. அப்போதைய ஜேர்மனியப் பேரரசுதான் துருக்கியின் ஐரோப்பிய நட்பு நாடு. துருக்கி இழந்த பெருமையை மீட்டுத்தருவதாகவும் துருக்கிய இராணுவத்தை நவீனமயப்படுத்த உதவிகள் புரிவதாகவும் ஜேர்மனி உறுதி வழங்கியது. துருக்கியிலிருந்த ஆர்மீனியர்கள் பற்றி ஜேர்மனி கவலைப்படவேயில்லை. பொருளாதார, இராணுவ நலன்களுக்கு முன்னால் மக்கள் படப்போகும் துயரம் புதிய கூட்டணியின் கண்ணுக்குத் தெரியவில்லை. ஜேர்மனி கூட்டாளியாயிருப்பதால், ‘ஆர்மீனியருக்கு என்ன நடந்தாலும் ஜேர்மனி தட்டிக்கேட்கப்போவதில்லை’ எனத் துருக்கி கருதியது. ஜேர்மனியும் அந்த எண்ணத்தில் மண்ணள்ளிப் போடவில்லை. போரில் ஜேர்மனி வெல்லும் எனவும் ஐரோப்பிய நாடுகளிடமிருந்தும் ரஷ்யாவிடமிருந்தும் ஜேர்மனி தம்மைக் காக்குமெனவும் துருக்கி கண்மூடித்தனமாக நம்பியது. 1914 குளிர்காலத்தில் துருக்கியின் ஆர்மீனியப் பகுதிகளுக்குள் ரஷ்ய இராணுவம் நுழைந்தது. ஆர்மீனியர்கள் துருக்கி, ரஷ்யா இரு நாட்டுப் படைகளிலும் இருந்தனர். ரஷ்யாவின் தென்பகுதியிலுள்ள கிராஸ்னோதார், ஸ்ராவ்ரோபோல் பிரதேசங்களோடு செச்னயா, டகிஸ்தான், ஜோர்ஜியா, அசர்பைஜான், ஆர்மீனியப் பகுதிகளில் எதிர்தாக்குதல்களுக்குப் பொறுப்பதிகாரியாகவும் என்வர் பாஷாவே இருந்தார். சில வாரங்களில் 90,000 இராணுவத்தினரை இழந்து படுதோல்வியடைந்தது துருக்கி. இளம் துருக்கியரின் அரசாங்கம் தோல்விக்கு ரஷ்ய ஆர்மீனியக் கூட்டுச்சதியே காரணமெனப் பழிசுமத்தியது. கிறிஸ்தவர்கள் தமக்கெதிராக ஒன்று சேர்ந்துவிட்டார்கள் என்பதே துருக்கி மக்களுக்கு, படுதோல்விக்கான காரணமாகக் கூறப்பட்டது ‘ஆர்மீனியர்கள் எம் எதிரிகள்’ என்று துருக்கி அரசு இந்தக் குற்றச்சாட்டு மூலம் பிரகடனம் செய்தது. பலம்பொருந்திய எதிரி நாடுகளுக்கு துருக்கி மீது எந்தச் செல்வாக்கும் இக்காலத்தில் இருக்கவில்லை. எல்லா நாடுகளுமே உலகப்போரில் மும்முரமாக இருக்க, யாருக்குமே ஆர்மீனியர்களைப் பற்றி நினைக்கக்கூட நேரம் இருந்திருக்கவில்லை. “துருக்கி இராணுவத்திலிருந்த ஆர்மீனியர்கள் ரஷ்ய இராணுவத்தோடு சேர்ந்து விட்டனர்... எங்களை ஏமாற்றிவிட்டனர்” என்று இளம் துருக்கியர் அரசு கட்டுக்கதைகளைக் கட்டவிழ்த்துவிட்டது. துருக்கியின் இந்தத் துரோகத்தால் துருக்கிய இராணுவத்திலிருந்த ஆர்மீனியர் ஆயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர். கைமேல் பலன்.

உலகம் நம்பும்படியான கட்டுக்கதைகளைப் பரப்பிய துருக்கி, உள்ளூரில் சதித்திட்டங்களை இலாவகமாக அரங்கேற்றியது. வான் எனும் நகரத்தின் ஆளுநராக இருந்தவர் என்வர் பாஷாவின் மைத்துனர். இவர் ஆர்மீனியர் வாழ்ந்த பகுதிகள் மீது தாக்குதலை




ஆர்மீனிய இனப்படுகொலை: 1915–1923



கோர் விராப் தேவாலயம். ஆர்மீனியாவில் துருக்கிய எல்லையில் அமைந்துள்ளது. பின்னணியில் ஆர்மீனியர்கள் தம் தேசிய அடையாளமாகக் கருதும் அறாறற் மலை தெரிகிறது. இது இன்று துருக்கியின் கட்டுப்பாட்டில் உள்ளது. இங்குதான் நோவாவின் பேழை தரித்ததாக பரிசுத்த வேதாகமம் (ஆதியாகமம் 8:4) கூறுகின்றது.

முன்னெடுத்தார். ஆர்மீனியர்கள் தடுப்பரண்களை அமைத்து தம் மக்களைக் காக்கப் போராடினர். உதவி எதுவுமே இல்லாத நிலையிலும் 4 வாரங்கள் துருக்கிப் படைகளால் முன்னேற முடியவில்லை. ரஷ்யாவுக்கெதிரான படைநடவடிக்கை என்ற போர்வையில் வான் நகரத்து ஆர்மீனியர்கள் பல்லாயிரம்பேர் கொன்றுகுவிக்கப்பட்டனர். பின்னர், ரஷ்யர்களின் தாக்குதலின் உக்கிரம் தாங்கமுடியாமல் துருக்கிப்படைகள் பின் வாங்கின. வான் நகரினுள் ரஷ்யப்படைகள் நுழைந்தன. இப்போது 'ஆர்மீனிய – ரஷ்யச் சதிக்கான ஆதாரம் இதுதான்' எனத் துருக்கி கதைபரப்பியது. ரஷ்யாவுடனான எல்லைகளை வரையறை செய்துகொள்ளவேண்டியிருப்பதால் ஆர்மீனியர்கள் வேறிடங்களில் குடியேற்றப்படவேண்டும் என்று நாடுகடத்தப்பட்டனர். துருக்கியரின் ஆட்சிப்பகுதியிலிருந்த சிரியப் பாலைவனம் நோக்கியே பயணம் அமைந்தது. நூற்றுக்கணக்கான கிலோ மீற்றர்கள் நடத்திச் செல்லப்பட்ட ஆர்மீனியர் சென்றது மரணத்தை நோக்கியே என புறப்பட்ட ஆர்மீனியர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆர்மீனியர்களை முற்று முழுதாகத் துருக்கி நிலப்பரப்பிலிருந்து அகற்றுவதுதான் துருக்கியின் திட்டம். 'போர்க்கால வெளியேற்றம்' என்பதைத் துருக்கி முழு ஆர்மீனியர்களையும் ஒழித்துக்கட்டப் பயன்படுத்தத் தீர்மானித்திருந்தது. இராணுவரீதியான தோல்வியைத் தவிர்க்க முழு ஆர்மீனியர்களையுமே நாடுகடத்துவதில் துருக்கி தெளிவாக இருந்தது. புதிய சட்டமொன்று இயற்றப்பட்டு தேசத்துரோகம், உளவு போன்ற சந்தேகங்கள் இருந்தால் முழுக்கிராமத்தையோ நகரத்தையோ மீள்குடியேற்றம் என்ற பெயரில் நாடுகடத்தும் அதிகாரம் படையினருக்கு வழங்கப்பட்டது.

'இப்போதைய போர் கிறிஸ்தவர்களுக்கெதிரானதாயிருப்பதால் முதலில் எங்கள் நாட்டிலிருந்து கிறிஸ்தவர்களை ஒழித்துக்கட்ட வேண்டும்' என்று புனிதப் போர் பிரகடனம் செய்யப்பட்டது. ரஷ்யர்கள் மேலும் முன்னேற முன்னர் ஏதாவது செய்யவேண்டுமென்ற அவசரத்தில் கொன்ஸ்தாந்திநோபிள் (இப்போதைய இஸ்தான்புல்) நகரில் ஏப்பிரல் 24, 1915இல் மதகுருக்கள், கல்விமான்கள், சமூகத்தலைவர்கள், எழுத்தாளர்கள் என்று இலக்கு வைத்து 250 பேர் கைது செய்யப்பட்டனர். மறுநாள் இன்னும் 600 பேர் கைதாகினர். கொலைக்களம் நோக்கி நாடுகடத்தப்பட்டனர். ஒரு மாதத்தின் பின் அனைவரும் கொல்லப்பட்டனர். தொடர்ந்து பல இலட்சக்கணக்கானவர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். ஆர்மீனியர்களின் அசையும், அசையாச் சொத்துகள் எல்லாம் புதியதொரு சட்டத்தின் மூலம் அரசுடைமையாக்கப்பட்டன. கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 1.5 மில்லியன்.

ஆர்மீனியர்கள் மீது நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலை என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சொன்னது 2001ல் திருத்தந்தை இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் ஆர்மீனியக் கிறிஸ்தவத் தலைவரொருவரோடு சேர்ந்து கையெழுத்திட்ட பிரகடனத்தில் இருந்த சொற்களின் நினைவூட்டல். இப்போது சொல்லப்பட்டிருப்பது வத்திக்கானில் நடைபெற்ற வழிபாடொன்றில். இதுதான் முக்கியத்துவம் பெறுகின்ற விடயம். மேலும், 20ம் நூற்றாண்டின் பெரும் மூன்று இனப்படுகொலைகளாக ஆர்மீனியப் படுகொலைகளோடு ஹிட்லரால் யூதர்கள் மீது நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலையையும் ஜோசப் ஸ்ராலின் ஆட்சியில் உக்ரெய்னில் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட பஞ்சத்தினால் நிகழ்ந்த உக்ரெய்னிய இனப்படுகொலையையும் திருத்தந்தை குறிப்பிட்டார். திருத்தந்தை ஆர்மீனியப் படுகொலைகளை ISIS, Boko Haram, அல் - ஷபாப் போன்ற இஸ்லாமியக் குழுக்களின் சமகாலக் கிறிஸ்தவர் மீதான தாக்குலோடும் தொடர்புபடுத்தினார்.

தொடர்ந்து அவுஸ்திரியா இனப்படுகொலைத் தீர்மானம் நிறைவேற்றியது. ஐரோப்பிய ஒன்றியமும் இணைந்து கொண்டதோடு அங்கத்துவ நாடுகளையும் ஆர்மீனிய இனப்படுகொலையை ஏற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்தியது. இதுவரையில் 25க்கு மேற்பட்ட நாடுகளும் 45க்கு மேற்பட்ட ஐக்கிய அமெரிக்க மாநிலங்களும் ஆர்மீனிய இனப்படுகொலைத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளமை ஆர்மீனியப் புலம்பெயர் சமூகத்தின் அயரா உழைப்பின் பலன்.

ஒட்டோமன் துருக்கியர் தங்கள் ஆதிக்கத்திலிருந்த சிறுபான்மையினர் எவரையுமே விட்டுவைக்கவில்லை. கிரேக்கத்தின் பொந்தியன் சிறுபான்மையினரும் வேறு சில சிறுபான்மை இனக்குழுமங்களைச் சேர்ந்தோருமாக 450,000 – 900,000 பேரும் அசீரியக் கிறிஸ்தவர்கள் 150,000 – 300,000 பேர் வரையிலும் துருக்கியரின் மானுடவேட்டையில் தப்பவில்லை.

''நாடுகடத்தப்படுவோரில் யாரேனும் இஸ்லாமிய மதத்துக்கு மாறினால் அவர்கள் இங்கேயே இருக்கலாம்'' - ஒரு ஜேர்மனிய இராஜதந்திரிக்கு ஒரு துருக்கிய இராணுவ அதிகாரி சொன்னது.

எவ்வாறான கொடுமைகள் ஆர்மீனியர்கள் மீது நிகழ்த்தப்பட்டன? கொஞ்சம் மேலோட்டமாகப் பார்ப்போம். பாலைவனம் நோக்கிக் கொண்டுசெல்லப்பட்டவர்கள் கைகளில் எது இருந்தாலும் குர்தியர்களும் துருக்கியரும் அவற்றைக் கொள்ளையடித்தனர். அழகான இளம் பெண்கள் கடத்திச் செல்லப்பட்டு துருக்கி அதிகாரிகளினதும் செல்வந்தர்களினதும் அந்தப்புரங்களுக்கு பாலியல் அடிமைகளாக அனுப்பப்பட்டனர். படையினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு நிர்வாணமாக சிலுவைகளில் வரிசையாக அறையப்பட்டனர். ஒரு பத்து வயதுச் சிறு

தொடர்தல் 8ம் பக்கம்

## இனப்படுகொலையும் ஒபாமாவும்

அண்மையில் ஜனாதிபதி பராக் ஒபாமா, ஆர்மீனிய இனப்படுகொலை நூற்றாண்டையொட்டி வெளியிட்ட அறிக்கையில், கொலைகளைக் கண்டித்திருந்தார். ஆனால் மிகக் கவனமாக 'இனப்படுகொலை' என்ற சொல்லைத் தவிர்த்திருந்தார். அமெரிக்கா - துருக்கி உறவுகள் பாதிக்கப்படலாம் என்று காரணம் பொழிப்புரையாகப் பிறகு அமெரிக்க அதிகாரிகளால் வழங்கப்பட்டது. ஆர்மீனியர்கள் இது விடயத்தில் ஏமாற்றமடைந்துள்ளனர்.



2008 ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையின் போது ''ஆர்மீனிய இனப்படுகொலையை அங்கீகரிப்பேன்'' என வாக்குறுதி கொடுத்திருந்ததை மறந்து சராசரி அரசியல்வாதியாகி விட்டார் ஒபாமா.

துருக்கிய வான்படைத்தளங்களை அமெரிக்கா பயன்படுத்திவருகிறது. மத்திய கிழக்கு வான் பரப்பைக் கண்காணிக்கும் அமெரிக்காவின் ராடார்களும் துருக்கியில் நிறுவப்பட்டுள்ளன.

இராணுவ நலனை முன்னிட்டு காற்றில் பறக்கின்றன வாக்குறுதிகள்!

# துருக்கி பதில் சொல்லியே ஆகவேண்டும்

**- கிரக் சிற்றிலியான்**

**ஒன்ராறியோ சட்டமன்ற முன்றலில் ஆர்மீனியப் படுகொலை நூற்றாண்டு நினைவு நிகழ்வு நடைபெற்ற மறுநாள் திங்கட்கிழமை ஆர்மீனியப் படுகொலை நூற்றாண்டு நினைவுக்குழுவின் ஒன்ராறியோ தலைவர் Greg Chitilian அவர்களைத் தாய்வீடு சந்தித்தது.**




**வெவ்வேறு நாடுகளிலிருந்து கனடா வந்த ஆர்மீனியர்களை நேற்றுச் சந்தித்திருந்தோம். இந்நாடுகளுக்கு ஆர்மீனியர்கள் எவ்வாறு குடிபெயர்ந்தார்கள்?**

ஒட்டோமன் துருக்கியர்கள் சிரியப் பாலைவனத்துக்கு நாடுகடத்திய ஆர்மீனியர்களில் தப்பிப்பிழைத்தோர் தம்மால் இயன்ற வழியில் ஏதோ ஓரிடத்தில் சென்று குடியமர்ந்தனர். அவ்வாறு சென்றவர்கள் தாம் சிரியா, லெபனான், எகிப்து, கிரேக்கம் என்று பல நாடுகளிலும் குடியேறினர். 200,000 சிறுவர்கள் தாய், தந்தையரை இழந்து ஆதரவில்லாமற் தவித்தபோது மேற்கத்தைய மிஷனரிகள் பலரைப் பொறுப்பெடுத்தனர். வசதியுள்ள வெவ்வேறின மக்களும் தத்தெடுத்தனர். குர்தியரும் துருக்கியரும் கூட ஆர்மீனியக் குழந்தைகளை தத்தெடுத்தனர். மத்திய கிழக்கின் பல நாடுகளிலும் வாழ்ந்த ஆர்மீனியர்கள் 1967ல் நடைபெற்ற 6 நாட் போர் எனப்படும் இஸ்ரேல் - அரபுப் போரின் பின்னர் வெளியேறி உலகின் பல நாடுகளிலும் தஞ்சம் புகுந்தனர். அந்தக் கால கட்டம் தான் ஆர்மீனியர் கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கும் மிகப்பெரும் எண்ணிக்கையில் தஞ்சம் புகுந்த காலம்.

**200,000கும் அதிகமான குழந்தைகளில் குர்தியராலும் துருக்கியராலும் தத்தெடுக்கப்பட்ட குழந்தைகள் என்ன வானார்கள்? அவர்களுடைய அடையாளம் மாறிப்போனதா?**

அடையாளம் தொலைந்துபோனது. ஆனாலும் அந்தக் குழந்தைகள் வளந்து பெரியவர்களாகி தம் அடையாளத்தை, தம் பூர்வீகத்தை உணர்ந்தவர்கள் திரும்பவும் தமது சொந்த அடையாளத்தை அடைந்திருக்கிறார்கள். அவர்களின் அடுத்தடுத்த தலைமுறையினர்கூட மூதாதையரின் வேர்களைத் தேடியறிந்து தம்மீது திணிக்கப்பட்ட அடையாளங்களைத் துறந்து ஆர்மீனியரோடு இணைவது பரவலாக நிகழ்கிறது. சில கணிப்புகள் 1 -2 மில்லியன் வரையிலான ஆர்மீனியர்கள் இஸ்லாமியர்களாக இப்போதும் இருக்கின்றனரென்று கூறுகின்றன. இஸ்லாமியராக இருந்தாலும் துருக்கியர் இவர்களை, மதம் மாற்றப்பட்ட அல்லது மதம் மாற்றப்பட்டோரின் பரம்பரையில் வந்த ஆர்மீனியர்கள் என்றே கருதுகின்றனர். இஸ்லாமியராக இருந்தும் இரண்டாம் தரக் குடிமக்களாகவே இவர்கள் நடத்தப்படுகிறார்கள். ஆனால் யாருமே துருக்கியில் இதைப்பற்றிப் பேசமுடியாது. பேசமுடியாதவாறு அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த இடத்தில் துருக்கியில் வெளிவந்து கொண்டிருக்கும் ஆர்மீனிய துருக்கிய மொழிச் செய்தித்தாள் Agos ன் ஆசிரியர் Hrant Dink ஐப் பற்றிச் சொல்லவேண்டும். இவர் ஆர்மீனிய இனப்படுகொலையைத் துருக்கி அங்கீகரிக்கவேண்டுமெனத் தொடர்ந்து குரலெழுப்பி வந்தவர். இவரை ஒரு 17 வயதான இளைஞன் 2007ல் சுட்டுக் கொன்றான். இவரது இறுதி ஊர்வலத்தில் 200,000 வரையிலான மக்கள் கலந்துகொண்டனர். Hrant Dinkன் கொலையைத் தொடர்ந்து துருக்கியில் ஆர்மீனியர்கள் ஒன்றுசேரத் தலைப்பட்டனர். முன்னொரு காலத்தில் ஆர்மீனிய இராச்சியத்தின் தலைநகராக Tigranakert என்ற நகரம் இருந்தது. இதைத் தலைநகராக்கிய அரசன் இங்கு அப்போ

தொடர்தல் 8ம் பக்கம்

7ம் பக்கத் தொடர்ச்சி...

வன் உயிரோடு சிலுவையில் அறையப்பட்டபோது ஏதோ ஒரு வகையில் காப்பாற்றப்பட்டு கைகளில் ஆணி அறையப்பட்ட காயத்தைக் காட்டிக்கொண்டிருக்கும் அந்தச் சிறுவனின் நிழற்படம் வெளியானது (ஐந்தாம் பக்கத்தில் உள்ள படம்). ஒரு தேவாலயத்தின் பங்குத்தந்தை தேவாலயக் கதவிலேயே உயிரோடு அறையப்பட்டார். ஆண்களும் வரிசையாக உயிரோடு சிலுவையில் அறையப்பட்டனர். துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சிக்கு இலக்குகளாகப் பல்லாயிரக்கணக்கானோர் நிறுத்தி நெற்றியிலோ நெஞ்சிலோ சுட்டுக் கொல்லப்பட்டனர். உயிர் போகுமளவுக்குக் குண்டு பாயாமல் உடலங்களோடு அசைவற்றுக் கிடந்தபோது, ஓர் இராணுவ அதிகாரி, "இறை தூதர்களின் பெயரால் உறுதி கூறுகிறேன். உயிர் தப்பியவர்கள் எழுந்து செல்லலாம். உங்களை ஒன்றும் செய்யமாட்டோம்'' என்று உரத்துக்கூற, நம்பி எழுந்து நடந்தவர்கள் இரண்டு அடி வைப்பதற்குள் சுட்டு வீழ்த்தப்பட்டனர். பாலைவனம் நோக்கிய நடையின்போது குளிரால் நடுங்கி இறந்தோர் பலர். பாலைவன வெயிலில் தொண்டை வரண்டு தாகத்தால் தவித்து மடிந்தோர் பலர். உண்ண உணவின்றி பசியால் வாடி நலிந்து மடிந்தோர் பலர். ஆறொன்றைக் கடக்கவைத்தபோது வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டோர் பலர், பட்டினி போட்டுக் கொல்வதற்கென்றே அமைக்கப்பட்ட வதை முகாம்களில் இறந்தோர் பலர். உயிரோடு தீவைத்து எரிக்கப்பட்டோர் பலர்,

ஒரு கிராமத்தில் 5000 பேர் உயிரோடு எரிக்கப்பட்டனர் இன்னொரு சம்பவத்தில் 90கிராமங்களைச் சேர்ந்த 80,000 பேர் உயிரோடு எரிக்கப்பட்டனர். பரிசோதனை எலிகளாகப் பயன்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டோர் பலர். மருந்துகளை அதிகம் செலுத்திக் கொல்லப்பட்டோர் பலர். வலி நீக்கவும் மயக்க மூட்டவும் பயன்படும் Morphine ஐ ஊசி மூலம் செலுத்திக்கொல்லப்பட்ட, கடலுக்குள் கொண்டுசெல்லப்பட்டு படகுகளிலிருந்து தூக்கிக் கடலில் வீசப்பட்டுக்கொல்லப்பட்ட குழந்தைகள் பல்லாயிரம்பேர். குழந்தைகள் மருந்து ஏற்றப்பட்டுச் கொல்லப்பட்டமை நிகழ்ந்தது செம்பிறைச் சங்க மருத்துவ மனையொன்றில். கொன்றவர்கள் படையினரோ சாதாரண துருக்கியப் பொதுமக்களோ அல்லர். 'உயிர் காப்போம்' என்று உறுதிமொழி எடுத்த மருத்துவர்கள். பின்னாளில் யூதர் மீது நாசிகள் செய்த மருத்துவப் பரிசோதனைக்கு முன்னோடியே துருக்கியர் ஆர்மீனியர் மீது நடத்திய பரிசோதனைகள்தாம் என்று கருதலாம். 3000 பேரோடு ஓர் ஆர்மீனியப் பேராலயமும் தீ வைக்கப்பட்டது. தப்பிவந்தோர் சுட்டுக்கொல்லப்பட்டனர். அறைகளில் அடைக்கப்பட்டு நச்சு வாயு செலுத்தியும் கொலை வியூகங்கள் விரிந்தன. தொற்று நோய்க் கிருமிகளின் பரப்பல் மூலமும் கொலைகள் பல்லாயிரக் கணக்கில் நடந்தேறின.

மேற்சொன்ன பல சம்பவங்களுக்கு உடன் பணியாற்றிய மருத்துவர்களும் துருக்கியில் அப்போது நிலைகொண்டிருந்த அமெரிக்க, ஜேர்மனிய, இத்தாலிய இன்னும் பல நாடுகளினதும் இராஜதந்திரிகளும் கொடுத்த வாக்கு மூலங்களும் அவர்கள் கைப்பட எழுதிய ஆவணங்களும் சாட்சி.

சிரியப் பாலைவனத்திலும் கருங்கடலின் கரையோரங்களிலும் நீங்கள் நடந்து செல்லும்போது மனித எலும்புகள் கால்களிலே தட்டுப்படலாம். அவையும் திட்டமிட்ட இனப்படுகொலையின் ஆதாரங்களே. இத்தனை துயரங்களும் நடந்த இடத்தின் அருகேயுள்ள கடலின் பெயர் கருங்கடல். சரியாகத்தான் பெயர் வைத்திருக்கிறார்கள்.

ஒன்றாறியோ சட்டமன்ற முன்றலில் (குயீன்ஸ் பார்க்) ஏப்ரல் 19ம் நாள் நடைபெற்ற ஆர்மீனிய இனப்படுகொலையின் நூற்றாண்டு நினைவு நிகழ்வில் கனடிய பாதுகாப்பு, பல்கலாச்சார அமைச்சர் ஜேசன் கெனி, ஒன்றாறியோ முதல்வர் கத்லீன் வின் அம்மையார், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராதிகா சிற்சபைசன், ஜோன் மக்கலம், ரொறன்ரோ நகர முதல்வர் ஜோன் ரொறி, மார்க்கம் நகர முதல்வர் பிராங்க் ஸ்கார்பிற்றி மற்றும் சில மாகாணச் சட்டமன்ற உறுப்பினர்கள், ஆர்மீனியாவின் கனடாவுக்கான தூதுவர் Armen Yeganian என்று பல்வேறு அரசியல் மட்டத்திலிருந்தும் பலர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர். லெபனான், ஜேர்மனி ஆகிய நாடுகளின் ரொறன்ரோ துணைத் தூதுவர்களும் சமுகமளித்திருந்தனர்.

'கடந்த காலத்தை மறவோம் நீதிக்கான போராட்டத்தைக் கைவிடோம். இலட்சிய உறுதியோடு தொடர்ந்து செல்வோம் என்று தனதுரையில் குறிப்பிட்டார் ஆர்மீனியாவின் கனடாவுக்கான தூதுவர்.

ராதிகா சிற்சபைசன், ''நான் உங்கள் சகோதரியாக உங்கள் முன் நிற்கிறேன். ஒருமைப்பாடுள்ள சகோதரியாக உங்கள் முன் நிற்கிறேன். நான் போரால் பாதிக்கப்பட்ட ஒரு குழந்தையாகக் கனடா வந்தேன். எம் மக்கள் அவர்களாக வாழ ஆசைப்பட்டதன் காரணமாகக் கொல்லப்பட்ட இலங்கையிலே நான் பிறந்தேன். ஒரு தமிழச்சியாகப் பிறந்ததற்காகப் பரிகசிக்கப்பட்டேன். கனடாவிலும் உலகெங்கும் வாழும் எம் மக்கள், தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையை உலகம் அங்கீகரிக்கவேண்

## புகழ்பெற்ற ஆர்மீனியர்கள்

அமெரிக்கத் தொலைக்காட்சிப் பிரபலம் Kim Kardashian முதன்முறையாக ஏப்ரல் மாதம் ஆர்மீனியா சென்று இனப்படுகொலை நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார். ஆர்மீனிய இனப்படுகொலையை அங்கீகரிக்குமாறு அமெரிக்க ஜனாதிபதியிடம் வேண்டுகோளும் விடுத்திருக்கிறார்.

'80களில் மிகப்புகழ் பெற்றிருந்த Cher என்ற Cherilyn Sarkisian புகழ்பெற்ற பாடகியும் நடிகையுமாவார். இவர்கள் இருவருமே தம் துறை சார்ந்து இனப்படுகொலை பற்றிய விழிப்புணர்வை உலகெங்கும் பரப்பி வருபவர்கள்.

ரெனிஸ் வீரர் அந்ரே அகாசி அமெரிக்கத் தாய்க்கும் ஈரானில் பிறந்த ஆர்மீனியத் தந்தைக்கும் அமெரிக்காவில் பிறந்தவர். ஆர்மீனியப் பெயர்கள் ….ian, ….yan என்றுதான் முடியும். இவரது பெயர் Agassi என்றிருக்கிறதேயென்று பார்த்தால்… பெயர் மூலம் அடையாளம் காணப்பட்டுக் கொல்லப்படாதிருக்க அவரது முன்னோரில் ஒருவர் Agassian இல் 'an' ஐ வெட்டிவிட்டாராம்.



## திரைப்பட இயக்குநர் அற்றம் எகோயன்

புலம்பெயர்க்கப்பட்டு எகிப்தில் வாழ்ந்த ஆர்மீனியப் பெற்றோருக்குப் பிறந்து, சிறுவயதில் கனடாவில் குடியேறியவர். ஆரம்பத்தில் ஆர்மீனியக் கலாச்சாரத்தில் ஈடுபாடு காட்டாதவர். பின்னர், "என்னை ஓர் ஆர்மீனியனாக அடையாளம் கண்டுகொள்வதில் வெட்கப்பட ஏதுமில்லை" என்று கூறி, அப்படி ஓர் அடையாளத்தை ஏற்றுக்கொண்டதில் மகிழ்வடைகிறார்.



அமைதியாக வாழ்ந்துகொண்டிருந்த ஆர்மீனிய மக்கள் சந்தித்த கொடுமைகள் இவரது படங்களில் பிரதான பங்கு வகித்துள்ளன. பிரான்சின் கான்ஸ் திரைப்பட விழாவில் பேசும்போது, "என்னுடைய வாழ்க்கையில் நான் எப்போதுமே இனச்சுத்திகரிப்பு ஏற்படுத்திய ரணங்களை உணர்ந்தபடியே வாழ்ந்திருந்தேன். என்னதான் இருந்தாலும் ஆர்மீனியர்கள் மீதான இன அழிப்பை உலகம் இன்றைக்கும் ஏற்றுக்கொள்ளவில்லை. இது தான் நான் தொடர்ந்த போராட்டத்தில் இருப்பதற்கான காரணமாகும்" என்று தன் மனவலியைப் பதிவுசெய்தார்.

நன்றி: எதிர் சினிமா, ரதன் - காலச்சுவடு.

## துருக்கி பதில் சொல்லியே ஆகவேண்டும்

- கிரக் சிற்றிலியான்

7ம் பக்கத் தொடர்ச்சி...

தைய மத்திய கிழக்கின் மிகப்பெரிய தேவாலயத்தை நிர்மாணித்தான். ஆர்மீனியப் படுகொலைகளின் பின் இந்நகரின் பெயர் துருக்கிய மொழியில் Diyarbakir என்று மாற்றப்பட்டுவிட்டது. தேவாலயமும் நீண்டகாலம் மூடப்பட்டிருந்தது. சிதைந்துபோயிருந்த தேவாலயம் 2011ல் புனரமைக்கப்பட்டுத் திறந்துவைக்கப்பட்டது. நகரின் மேயரும் தேவாலயத்தை மீளத்திறப்பதில் பேருதவி புரிந்தார். St. Giragos Church மீளத்திறக்கப்பட்ட முதலாவது ஆண்டில் 100 பேர் வரையிலே தான் வழிபாட்டுக்கு வருவர். ஆனால் கடந்த ஆண்டு பியானோ இசை நிகழ்ச்சியொன்றுக்காக இந்தத் தேவாலயத்துக்குச் சென்றிருந்த ரொறன்ரோ இசைக்கலைஞர் ஒருவரின் கூற்றுப்படி, தேவாலயம் நிறைந்து வழிகின்றது. 3000 பேருக்கு மேல் அமரக்கூடிய தேவாலயம் இது. வேர்களைத் தேடி வருவோரின் மையப்புள்ளியாக இத்தேவாலயம் இப்போது திகழ்கின்றது.

**சில நாட்களுக்கு முன் கத்தோலிக்கத் திருச்சபையின் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 'ஆர்மீனியர் மீது நடத்தப்பட்டது இனப்படுகொலை' என்று பிரகடனம் செய்திருக்கிறார். ஆர்மீனியாவின் ஏனைய திருச்சபைகளின் நிலைப்பாடு என்ன?**

பல நாடுகளிலும் உள்ளது போலவே ஆர்மீனியாவிலும் பல கிறிஸ்தவப் பிரிவுகள் இருக்கின்றன. எல்லாத் திருச்சபைகளிலுமே ஒரே நிலைப்பாடுதான் 'இனப்படுகொலை' எனும் விடயத்தில் நிலவுகின்றது. பிரிவுகள் பலவாகினும் ஆர்மீனியர்கள் என்று வரும்போது நிலைப்பாடு ஒன்றே. நேற்று குயீன்ஸ் பார்க் நினைவு நிகழ்வு முடிந்த பின்னர் ஊர்வலமாகச் சென்று ஒரு தேவாலயத்திலே வழிபாடு நடத்தினோம். பல திருச்சபைகளையும் சார்ந்த ஆயர்கள், துறவிகள், குருவானவர்கள் கலந்துகொண்டு பிரார்த்தனைகளையும் நடத்தியதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

**ஆர்மீனிய இனப்படுகொலை நிகழ்ந்த காலத்தில் துருக்கியின் கூட்டாளியாக இருந்த ஜேர்மனி எப்போதாவது துருக்கிக்கு உதவியமைக்கு மன்னிப்புக் கோரியிருக்கிறதா?**

இன்னும் இல்லை. ஜேர்மனிய இராணுவ மருத்துவப் பிரிவிலே பணியாற்றிய இரண்டாம் லெப்ரினன்ட் Armin T.Wegnerஎன்பவர் பல படுகொலைச் சம்பவங்களைத் தொகுத்திருக்கிறார். சிரியப் பாலைவனத்தில் அவரால் உயிரைப் பணயம் வைத்து எடுக்கப்பட்ட நூற்றுக்கணக்கான நிழற்படங்களும் அவரது சேகரிப்பில் அடங்கும். படுகொலைகள் தொடர்பான மிக முக்கியமான சாட்சியம் இந்தத் தொகுப்பு இதுபோலவே பல சம்பவங்களை ஜேர்மனியர் அறிந்திருந்தனர் பதிவு செய்திருக்கின்றனர். துருக்கிக்கு நட்பு நாடாக இருந்துகொண்டு படுகொலைகளின்போது பாராமுகமாக இருந்தமைக்குப் பதில் கூற வேண்டிய, மன்னிப்புக் கோரவேண்டிய, இனப்படுகொலை என்ற அங்கீகாரத்தைச் செய்ய வேண்டிய நாள் விரைவில் வரும். ஏனெனில் அவர்கள் எல்லாவற்றையும் நன்கு அறிந்தே இருந்தனர்.

(இந்த நேர்காணல் நடைபெற்று 3 நாட்களின் பின் ஏப்ரல் 23ம் நாள் வியாழக்கிழமை ஜேர்மனிய ஜனாதிபதி Joachim Gauck, ''நூறாண்டுக்கு முன், அப்போதைய ஒட்டோமன் அரசோடு உறவுகளைப் பேண விரும்பியதாலேயே ஜேர்மனி இனப்படுகொலைகளைத் தடுக்கவில்லை. ஜேர்மனிய இராணுவத்தினர் நாடுகடத்தலைத் திட்டமிட்டதோடு செயலிலும் இறங்கியிருந்தனர். ஒட்டோமன் பகுதிகளிலிருந்த ஜேர்மனிய இராஜதந்திரிகளும் அவதானிகளும் இனப்படுகொலை பற்றி முன்கூட்டியே தந்த தகவல்கள் புறந்தள்ளப்பட்டன. பாதிக்கப்பட்டோரின், உயிரிழந்தோரின் வழித்தோன்றல்கள் வரலாற்று உண்மைகளும் வரலாற்றுத் தவறுகளும் ஏற்றுக்கொள்ளப்படுவதை எதிர்பார்க்கமுடியும். நன்கு திட்டமிடப்பட்ட இந்தப் படுபாதகப் படுகொலைகள் ஆர்மீனியர்கள் மீது ஏவப்பட்டது அவர்கள் ஆர்மீனியர்கள் என்பதாலேயே. நடந்த தவறுகளுக்கு பொறுப்புக்கூறி குற்றத்தில் பங்கேற்க ஜேர்மனியர்கள் முன்வரவேண்டும்'' என்று கூற, துருக்கி வானத்துக்கும் பூமிக்குமாகக் குதித்தது. ஏற்கனவே அவுஸ்திரியாவும் 'ஆர்மீனிய இனப்படுகொலை' பிரகடனம் செய்திருந்தது. வத்திக்கான், அவுஸ்திரியா ஆகியவற்றுக்கான தூதர்களை மீள அழைத்து கோபத்தை வெளிப்படுத்தியது துருக்கி.

4 மில்லியனுக்கு மேற்பட்ட துருக்கியர்கள் வசிக்கும் ஜேர்மனியில் இந்தக் கோடை காலம் அனல் பறக்கக்கூடும் 'இனப்படுகொலைத் தீர்மானம், ஜேர்மனிய நாடாளுமன்றத்தில் நிறைவேறக்கூடிய சாத்தியம் அதிகமாகவே தென்படுகின்றது.)

**கனடா ஆர்மீனிய இனப்படுகொலைத் தீர்மானம் நிறைவேற்றுவதில் கனடிய ஆர்மீனியர்கள் ஆற்றிய பங்கு என்ன?**

விடாமுயற்சி. 45 ஆண்டுகளாகத் தொடர்ந்த முயற்சி. மழையோ பனியோ வெயிலோ சனி ஞாயிறோ கிழமை நாட்களோ 45 ஆண்டுகள் தொடர்ந்து ஒட்டாவாவில் நாடாளுமன்ற முன்றலில் கூடி 'ஆர்மீனிய இனப்படுகொலை'யை அங்கீகரிக்குமாறு கோரிக்கைவைத்தோம். பல்வேறு மட்டங்களிலும் உறவுகளை வலுப்படுத்தி மெதுமெதுவாக

டுமெனப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். உங்கள் உறவுகள் படுகொலை செய்யப்பட்டதை இனப்படுகொலை என்று உலகம் ஏற்றுக்கொள்ளச் செய்தமையை எங்கள் உறவுகளைப் பறிகொடுத்த நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இனப்படுகொலைக்கெதிரான உங்கள் ஒருமித்த செயற்பாட்டுக்காக, மானுடத்துக்கெதிரான குற்றங்களுக்கெதிராகவும் உலகெங்கும் நடந்த, நடக்கின்ற இனப்படுகொலைகளுக்கெதிராகவும் குரல்கொடுக்கும் உங்களுக்கு நன்றி" என்று உரையை முடிக்கமுன்பே அங்கு கூடியிருந்த பலரின் கண்களில் ஈரம்.

"இனப்படுகொலை நினைவுகள் ரொறன்ரோவுடன் என்றென்றும் நிலைத்திருக்கும்" என்றார் ரொறன்ரோ நகர முதல்வர்.

மார்க்கம் நகர முதல்வர், "இனப்படுகொலை என்பதன் வரைவிலக்கணத்தின் படி, ஐயத்துக்கிடமேயில்லை…ஆர்மீனியாவில் நடந்தது இனப் படுகொலையே" என்று 2007லேயே மார்க்கம் நகர சபையில் நிறைவேற்றிய தீர்மானத்தை மீண்டும் உறுதிப்படுத்தினர். 7ம் வட்டார உறுப்பினர் லோகன் கணபதியும் நிகழ்வில் பங்குபற்றியிருந்தார்.

அன்றைய நிகழ்வின் சிறப்புப் பேச்சாளர் திரைப்பட இயக்குநர் அற்றம் எகோயன், "எங்கள் துயரையும் வலியையும் உணர்ந்துகொண்ட நாட்டிலே, எங்கள் பேரிழப்பை உணர்ந்து அங்கீகரித்த மாகாணத்திலே, எங்கள் திறமைகளையும் பங்களிப்புகளையும் அரவணைத்துக் கொண்ட நகரத்திலே வாழ்கிறோம். நூறாண்டுக்கு முன்னர் எமது கலாச்சாரம் அழிவைச் சந்தித்தது. ஆனால் நூறாண்டுக்குப் பின்னர், நாங்கள் ஒற்றுமையாயுள்ளோம். நாங்கள் பலமாயுள்ளோம். நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்… நீதி நிலைநாட்டப்படுமென உறுதி பூண்டுள்ளோம். எங்கள் அனுபவங்களை தொடர்ந்தும் எங்களைச் சூழவுள்ளோருக்கான நீதியை நிலைநாட்டப் பயன்படுத்த உறுதிபூண்டுள்ளோம்" என்று தனதுரையை நிறைவு செய்தார்.

நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய Marianne Davitjan என்ற பெண்மணி, "இனப்படுகொலைக்குள்ளான சமூகங்களின் பட்டியலில் தமிழரையும் உள்ளடக்கியிருந்தார். செப்ரெம்பர் 09, 1925இல் 100 சிறுவர்கள் இசைக்கருவிகளோடு ரொறன்ரோவின் குயீன்வீதி-வழியாக நகரசபைக் கட்டடத்தைக் கடந்து அணிவகுத்துச் சென்றனர். இவர்கள் ஜோர்ஜ்ரவுண் சிறுவர்கள் (Georgetown Boys). பல திருச்சபைகள், பல்லாயிரக்கணக்கான கனடியரின் அன்பளிப்புகள் துணையோடு உயிரைத் தவிர எல்லாவற்றையும் இழந்த இந்த ஆர்மீனியச் சிறுவர்கள் கனடாவுக்கு வந்திருந்தனர். Georgetownல் தங்கவைக்கப்பட்டிருந்தனர். மேற்கைரோப்பியர் தவிர்ந்த ஏனையோர் கனடாவில் குடியேறக் கடும் கட்டுப்பாடுகள் இருந்த நிலையிலும் இந்தச் சிறுவர்களைக் கனடா ஏற்றுக்கொண்டது. இதுதான் கனடாவின் முதலாவது சர்வதேச மனிதாபிமான நடவடிக்கையெனக் கருதப்படுகிறது" என்று வரலாற்றுத் தகவலொன்றையும் பகிர்ந்தார். (இப்போதைய Halton பிரதேசத்தில் Halton Hills நகருள் உள்வாங்கப்பட்டுவிட்டது Georgetown). குயீன்ஸ் பார்க் நிகழ்வுகளின் ஒருங்கமைப்பாளர்களில் ஒருவரான Darren Keskinian, "இங்கு அசீரியர்கள், குர்து இனத்தவர்கள், பொந்தியன் கிரேக்கர்கள், உக்ரெய்னியர்கள், யூதர்கள் என்று இனப்படுகொலைகளால் பாதிக்கப்பட்ட சமூகத்தவர்கள் இணைந்திருக்கிறார்கள். இங்கு ஆர்மீனியர்களை மட்டும் நினைவுகூர நாங்கள் வரவில்லை. இனப்படுகொலைக்குள்ளான சமூகங்களை நினைவுகூர மட்டும் நங்கள் வரவில்லை. இனிமேல் இனப்படுகொலைகளே நிகழக்கூடாது என்று ஒருமித்துக் குரல்கொடுப்பதும் எங்கள் அனைவரதும் இணைவின் நோக்கம்" என்கிறார்.

"ஆர்மீனிய இளையோருக்கும் எங்கள் முன்னோர் இனப்படுகொலைக்குள்ளானது பற்றி அறிவூட்டிவருகிறோம். எனவே அவர்களும் அந்த அழிப்பின் வலியை, இழப்பின் வலியை உணர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். எனவே தான் பெருமளவில் இளையோரும் இங்கு கூடியிருக்கிறார்கள்" என்றும் கூறினார் Darren.

'நினைவு கூருகிறேன், வலியுறுத்துகிறேன்' (I Remember and Demand) என்பதுதான் நூறாண்டு நினைவின் மகுடவாசகம். அழிக்கப்பட்டோரை நினைவு கூருகிறேன், அவர்களுக்கான நீதியை வலியுறுத்துவேன்.

குயீன்ஸ் பார்க் நிகழ்வின் பின்னர் அங்கு குழுமியிருந்த 5000 வரையிலானோர் ஊர்வலமாக ஒரு தேவாலயத்துக்குச் சென்று வழிபாடு நடத்தினர்.

**2015** ஏப்பிரல் 24 வெள்ளிக்கிழமை, இனப்படுகொலைக்குள்ளானோரை நினைவு கூரவும் கனடாவுக்கு நன்றி செலுத்தவும் ஒட்டாவா நோக்கிய பயணம். விக்டோரியா பார்க் /401 சந்திப்புக்கருகே உள்ள ஆர்



ஆர்மீனியாவிலுள்ள இனப்படுகொலையில் கொல்லப்பட்டோருக்கான நினைவிடம்



நீண்ட வரிசைகளில் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்ட ஆர்மீனியப் பெண்கள்




மரணத்துக்கான பாதையில் அழைத்துச் செல்லப்படும் ஆர்மீனியர்கள்

# துருக்கி பதில் சொல்லியே ஆகவேண்டும்

**- கிரக் சிற்றிலியான்**




இனப்படுகொலையின்போது ஆர்மீனியர்கள்

எங்கள் தரப்பை, எங்கள் வலியைப் புரிய வைத்து எமக்கான ஆதரவை வலுப்படுத்தினோம். 2004 ஏப்ரிலில் கனடிய நாடாளுமன்றம் இனப்படுகொலையை அங்கீகரித்துத் தீர்மானம் நிறைவேற்றியது. அதன் பிறகும் ஒவ்வோர் ஆண்டும் ஒட்டாவாவுக்கு செல்கிறோம். இப்போது நாங்கள் செல்வது கனடாவுக்கு நன்றி செலுத்த.

**கனடிய அரசு, ஒன்ராறியோ மாகாண அரசு, மார்க்கம் நகரசபை போன்றன இனப்படுகொலைத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றன. கனடாவில் வேறெந்த மாகாண சபைகள் அல்லது ஆட்சிமன்றங்கள் இனப்படுகொலைத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றன?**

ஆம் பிரிட்டிஷ் கொலம்பியா, கியூபெக் ஆகிய மாகாண சபைகளும் ஆர்மீனிய இனப்படுகொலையை அங்கீகரித்துள்ளன.

**துருக்கி 'இனப்படுகொலை'யை மறுதலிப்பதை எவ்வாறு பார்க்கிறீர்கள்? துருக்கி எப்போதாவது 'இனப்படுகொலை' என்று ஏற்றுக்கொள்ளும், மன்னிப்புக் கோரும், இழப்பீடு வழங்கும் என்று எதிர்பார்க்கிறீர்களா?**

ஒரு குற்றம் நடக்கிறது. கொலை என்று வைத்துக் கொள்வோம் குற்றம் தொடர்பான புலனாய்வு முடிவுக்கு வந்து தண்டனை, தீர்ப்பு என்று வரும்வரை அந்தக் குற்றம் தொடர்பான கோப்பு திறந்தே இருக்கும். ஒரு கொலைக்கே இப்படியென்றால் ஒன்றரை மில்லியன் மக்களின் கொலைகளை ஒரு தீர்வுமில்லாமல் தீர்ப்புமில்லாமல் எப்படி மறந்துவிடமுடியும்? எப்படி அந்த விடயத்தை மூடிவிடமுடியும்? இது தொடர்பில் தமிழ் மக்களுக்கும் வலிகள், வேதனைகள் இருக்கின்றன. குற்றம் செய்தவர்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும். துருக்கி நாகரிகமடைந்த, அறிவுபெற்ற, வளர்ச்சியடைந்த நாடுகளோடு இணைந்து பயணிக்கவேண்டுமென்றால் இந்தப் படுகொலைகளுக்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும். இழப்பீடு கொடுத்தே ஆகவேண்டும். நாங்கள் நிதியை மட்டுமே இழப்பீடாகக் கோரவில்லை. எங்கள் நிலமும் எங்களுக்கு வேண்டும். இப்போதைய ஆர்மீனியா போன்ற 2 மடங்கு நிலப்பரப்பு துருக்கிக்குள் இருக்கிறது. இது ஆர்மீனியர்களின் நிலம்.

ஆர்மீனியர் மீதான இனப்படுகொலையை உலகம் ஏற்றுக்கொள்ள நீண்டகாலம் சென்றது. முதலாம் உலகப்போர் முடிவடைந்த பின்னர் மேற்கு நாடுகளின் அழுத்தத்தால் இப்போதைய துருக்கியில் இருக்கும் மேற்கு ஆர்மீனிய நிலப்பகுதி ஆர்மீனியர்களிடம் கையளிக்கப்படவேண்டும் என்று ஒப்பந்தம் கைச்சாத்தானது. துருக்கி வேறு வழியின்றி அதில் கையெழுத்திட்டது. ஆனால் ரஷ்யப் புரட்சியின் பின் சோவியத் யூனியன் விரிவாக்கத்தில் ஆர்மீனியாவை சோவியத் யூனியன் இணைத்துக்கொண்டது. அத்தோடு மேற்குலகநாடுகள், மேற்கு ஆர்மீனியா ஆர்மீனியர்களிடம் கொடுக்கப்படவேண்டும் என்று துருக்கியை வலியுறுத்தவில்லை. எங்கள் மேற்கு அவர்களின் கிழக்காகிவிட்டது.

**சோவியத்யூனியன் காலத்தில் ஆர்மீனியர்கள் தங்கள் நிலத்தை இணைக்குமாறு கேட்கவில்லையா?**

படுகொலைகளுக்குப்பிறகு, 1920இலிருந்து சுதந்திர ஆர்மீனியாவாக இருந்தது. இரண்டே ஆண்டுகள்தான். 1922 டிசெம்பரில் சோவியத் யூனியன் ஆர்மீனியாவை ஆக்கிரமித்துக் கொண்டது. 1965 வரையில் அதாவது, இனப்படுகொலைகளின் 50 ஆண்டு நினைவு நாள் வரையில் ஆர்மீனியர்கள் வாயே திறக்கவில்லை. திறக்கவும் முடியாது. 1965ல் 50ஆண்டு நினைவின் போது ஆர்மீனியர்கள் தெருக்களில் திரண்டு இனப்படுகொலையை சோவியத் யூனியன் அங்கீகரிக்க வேண்டுமெனவும் துருக்கியிடம் இழந்த நிலப்பகுதி மீட்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கை வைத்தனர். 2 ஆண்டுகளில் கொல்லப்பட்ட ஆர்மீனியர்களின் நினைவாக ஒரு நினைவுச் சின்னம் ஆர்மீனியத் தலைநகர் யெரெவானின் அருகே கட்டப்பட்டது. நடுவே ஓர் அணையாவிளக்கு. புலம்பெயர்ந்த ஆர்மீனியர்கள் பல போராட்டங்களை நடத்தத் தொடங்கினர். இதன்பிறகு

மீனிய சமூக மையத்திலிருந்து மட்டுமே 40 பேருந்துகள் புறப்பட்டன. ஒன்றாறியோவின் வேறு சில நகரங்களிலிருந்தும் மொன்றியாலிலிருந்தும் பல பேருந்துகளும் ஒட்டாவா வந்தன. 8,000–10,000 வரையிலான ஆர்மீனியர்களும் அசீரியர்கள், பொந்தியன் கிரேக்கர்களும் குர்து மக்களும் கூட வந்திருந்தனர். நாடாளுமன்ற முன்றலில் ஒரு பேரணி. அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரையைத் தொடர்ந்து 3 - 4 கி.மீற்றர் தொலைவிலுள்ள துருக்கியத் தூதரகத்துக்கு ஊர்வலமாகச் சென்று தூதரக முன்றலில் ஒரு கண்டனப்பேரணி. நாடாளுமன்ற முன்றலில் 70 வயதுக்கு மேல் மதிக்கத்தக்க Bertha Sivazlian என்ற ஒரு பெண்ணும் Barkev Sivazlian என்ற ஓர் ஆணும் ரீசேர்ட்டில் பழைய நிழற்படம் ஒன்றை அச்சிட்டு அணிந்திருந்தனர். ஓர் இளவயது ஆணின் நிழற்படம் அது. யாரென்று கேட்டபோது அந்த இருவரும் சொன்ன பதில். “இவர் எங்கள் தந்தை. துருக்கியரின் கொலைக் கரங்களுக்குத் தன் பெற்றோரைப் பறிகொடுத்து, 3 உடன் பிறப்புகளையும் தொலைத்துவிட்டு ஏதிலிச் சிறுவனாகக் காப்பகம் ஒன்றில் வளர்ந்தவர், 40 ஆண்டுகளுக்குப் பிறகு லெபனான், கிரேக்கத்தில் தன் உடன் பிறப்புளைக் கண்டுபிடித்து இணைந்தார். ‘40 ஆண்டுகளுக்குப் பிறகு எவ்வாறு இது சாத்தியமானது?’ என்ற கேள்விக்கு இரண்டு சொல்லே பதில். அந்த இரண்டு சொற்கள் ‘அவர் மறக்கவில்லை!.’

துருக்கியத் தூத ரகத்துக்கு முன்னால் ஒரு மரத் தின் கீழ் அமர்ந்திருந்த 72 வயதான John Oudabachian, “என் தாய், தந்தை இருவருமே படுகொலைகளிலிருந்து தப்பிப்பிழைத்தவர்கள். என் தந்தை 13 வயதில் நாடுகடத்தப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர். ஆனால் துருக்கியர் என் முன்னோர்கள் ஒன்றரை மில்லியன் பேரைக் கொடூரமாகக் கொன்றுவிட்டார்கள்” என்று கண்ணீர் மல்கச் சொன்னார். படுகொலை நடைபெற்றபோது அவர் பிறந்திருக்கவேயில்லை. ஆனாலும் இனத்துக்கு நடந்த துயரை அவரது துயராகவே அவர் உணர்கிறார்.

கனடாவில் 80,000 - 90,000 பேரளவிலேயே உள்ள ஆர்மீனியச் சமூகத்தினரால் இவ்வாறு நூற்றாண்டு நிறைவு நிகழ்வுகள் மிக நேர்த்தியாகத் திட்டமிடப்பட்டு, நடத்தப்படுகின்றன. ஆர்மீனியர்கள் பலரும் படுகொலைகள் பற்றிய பல தகவல்களை விரல் நுனியில் வைத்திருக்கிறார்கள். இளையோருக்கும் தெளிவுறச் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

வேறென்ன வேலைத்திட்டங்களை நூற்றாண்டு நிறைவையொட்டி முன்னெடுத்திருந்தனர் ஆர்மீனியர்? உயர்பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களிடையே கட்டுரைப் போட்டி நடத்துகின்றனர். இந்தக் காலத்து இந்த வயதுப்பிரிவினரில் பெரும்பாலானோருக்கு இனப்படுகொலைக்காலம் 4 தலைமுறைகளுக்கு முந்தியது. இவர்களுடைய பூட்டன், பூட்டிமார் பெரும்பாலும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சிலர் தப்பிப்பிழைத்திருக்கிறார்கள். தாய் - தந்தை, தாத்தா – பாட்டி வழியாக படுகொலை நினைவுகள் அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படுகின்றன. தான் ஒரு போதும் கண்டிராத, சில சந்தர்ப்பங்களில் படத்தில்கூட கண்டிராத பூட்டன் அல்லது பூட்டியைப் பற்றியும் இனப்படுகொலையிலிருந்து அவர் எப்படித் தப்பித்தார் என்பதையும் உணர்வுபூர்வமாக எழுதுகின்றனர் இளையோர். YouTubeல் ஒரு காணொலி. தனது பூட்டி உயர் தப்பிய கதையையும் பாலைவனத்துக்கு நடத்திச்செல்லப்பட்ட அனுபவத்தையும் சொல்கிறார் ஒரு மாணவி. தப்பிப்பிழைத்த பூட்டி தனது கதையைச் சொல்வதை ஒளிப்பதிவு செய்திருக்கிறார்கள். இந்த மாணவியும் பூட்டியைக் கண்டதில்லை. ஆனால் பூட்டியின் அனுபவத்தை அவர் கண்டு கேட்டு நடந்ததை உள்வாங்குகிறார். இவ்வாறான பல பதிவுகள் இணையத் தளங்களிலும் ஆர்மீனியர் நடத்துகின்ற இரு மொழி ஏடுகளிலும் காணக்கிடைக்கின்றன.

தங்கள் இனத்துக்கெதிரான படுகொலையையும் நடத்திவிட்டு அதைக் கங்கணம் கட்டிக்கொண்டு துருக்கி மறுப்பதைப் பார்த்து பதில் நடவடிக்கைகளில் இறங்குகிறார்கள் இளையோர்.

கடந்த பெப்பிரவரியில் ரொறன்ரோ பல்கலைக்கழக சென். ஜோர்ஜ் வளாகத்தில் கனடியத் துருக்கிய சங்கங்களின் சம்மேளனம் ஒழுங்கு செய்த ஒரு நிகழ்வு. ஆர்மீனியர்கள் மீது துருக்கி படுகொலை நடத்தவில்லை என்று பல நாடுகளுக்கும் ஓடியோடிப் பரப்புரை செய்யும் இருவரின் ‘இனப்படுகொலை என்ற சொல்லாடலுக்கெதிரான பரப்புரையை நியாயப்படுத்திய கருத்தரங்கு’ அது. முதன்மைப் பேச்சாளர்கள் இருவர். துருக்கியின் ‘ஊதுகுழல்’ எனக் கருதப்படும் Justin Mc Carthy ஒருவர். அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ண் பல்கலைக்கழகத்திலும் நியூ சவுத் வேல்ஸ் கலாபவனத்திலும் உரை நிகழ்த்தச் சென்று நிர்வாகங்களால் திருப்பி அனுப்பப்பட்டவர் இவர். மற்றவர் Bruce Fein. ஓர் அறிவுஜீவியாம். அமெரிக்காவிலுள்ள துருக்கியர் கூட்டமைப்பு இவரைச் சம்பளம் கொடுத்துப் பணிக்கமர்த்தியிருக்கிறது. ‘ஆர்

## அஞ்சலிக்கண்ணீர்



2004இல் நாடாளுமன்றத்தில் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது Sarkis Assadourian ஏனைய 307 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தனித்தனியாகச் சந்தித்து, “வாக்கெடுப்பின்போது தீர்மானத்தை ஆதரித்து வாக்களியுங்கள். தயவு செய்து எதிர்த்து வாக்களிக்கவேண்டாம். இயலுமானால் எதிர்ப்பதிலும் பார்க்க வாக்களிக்காமல் விலகியிருங்கள்” என்ற வேண்டுகோளுடன் கூடிய கடிதமொன்றைக் கையளித்திருந்தார்.

இனப்படுகொலையில் உயிர் பிழைத்தோரின் மகனான Sarkis 153:68 என்ற வாக்கு வித்தியாசத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது கண்ணீர் மல்க நின்றிருந்தார். அது படுகொலைக்குள்ளான ஒன்றரை மில்லியன் மக்களுக்கான உண்மையான அஞ்சலிக்கண்ணீர்.




மரணத்துக்கான பாதையில் கொல்லப்பட்ட ஆர்மீனியர்கள்



வழிநெடுகக் கொல்லப்பட்ட ஆர்மீனியர்களின் உடலகள் சிதறிக்கிடந்த காட்சி

# துருக்கி பதில் சொல்லியே ஆகவேண்டும்

## - கிரக் சிற்றிலியான்




தான் மேற்குலகம் ஆர்மீனிய இனப்படுகொலை பற்றிய விழிப்புணர்வு பெற்றது.

**இனப்படுகொலையை மறுத்தல் இனப்படுகொலையின் கடைசிக் கட்டமாகுமா?**

இல்லை. மறுத்தல் என்பது இனப்படுகொலையின் தொடர்ச்சியே. படுகொலைக்குப் பொறுப்பானவர்களே அதை ஏற்றுக்கொண்டு மன்னிப்புக்கோரி, இழப்பீடு வழங்கும் போது தான் இனப்படுகொலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது.

**உள்துறை அமைச்சர், இராணுவ அமைச்சர், கடற்படை அமைச்சர் என 3 பாஷாக்கள் இருந்தனர். படுகொலைகள் இவர்கள் வழிநடத்தலிலேயே நிகழ்த்தப்பட்டதாம். இவர்கள் என்ன ஆனார்கள்?**

மேற்குலகம் படுகொலைகளுக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என உறுதியாகச் சொல்லிவிட்டது. எனவே பல உயர் அதிகாரிகள், அமைச்சர்கள் தப்பி வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டனர். பலர் அகப்பட்டுக்கொண்டனர். அகப்பட்டவர்களுக்கு இராணுவ நீதிமன்றம் தண்டனை வழங்கியது. 2000 பேர் வரையில் கைதானார்கள். தப்பியோடிய அமைச்சர்களில் பலர் ஜெர்மனி தங்களைப் பாதுகாக்கும் என்று அங்கே ஓடினார்கள். உள்துறை அமைச்சர் தலாத் பாஷா ஜெர்மனியில் சுட்டுக் கொல்லப்பட்டார். ஆர்மீனியரான Soghomon Tehlirian என்ற 25 வயதுகூட நிரம்பியிராத இளைஞரால் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்த இளைஞர் ஆர்மீனியப் புரட்சிகர சம்மேளனம் (Armenian Revolutionary Federation) என்ற, ஆர்மீனிய இனப்படுகொலைகளுக்குப் பொறுப்பானவர்களைப் பழிவாங்கும் ஓர் அமைப்பைச் சேர்ந்தவர். வழக்கு விசாரணையின் போது “குற்றம் செய்ததாக நான் கருதவில்லை. என் மனம் தெளிவாகவே இருக்கிறது. நான் ஒரு மனிதனைக் கொன்றிருக்கிறேன். ஆனால் நான் கொலையாளி அல்லன்” என்று நீதிபதிக்குச் சொன்னார். Soghomon “குற்றமற்றவர்” என்று விடுதலையானார்.

என்வர் பாஷா தஜிகிஸ்தானில் ரஷ்யப்படையினரால் கொல்லப்பட்டார். ஜோர்ஜியாவின் Tbilisiயில் ஆர்மீனியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார் ஜமால் பாஷா. இந்த 3 பாஷாக்களும் துருக்கியில் அவர்கள் இல்லாமலே மரணதண்டனை விதிக்கப்பட்டவர்கள்.

**குயீன்ஸ் பார்க்கில் உலகப் புகழ் பெற்ற கனடிய ஆர்மீனியத் திரைப்பட இயக்குநர் அற்றம் எகோயான் சிறப்புரையாற்றினார். இனப்படுகொலைப் பின்னணியில் படங்களை இயக்கும் இவரது திரைப்படங்களும் இது போன்ற ஏனைய கலை வடிவங்களும் எந்த வகையில் முக்கியத்துவம் பெறுகின்றன?**

எமது போராட்டத்தின் இன்னொரு வடிவம் இது. உலகுக்கு எம்மைப்பற்றிய பல விடயங்களை நாம் இந்தக் கலை வடிவத்தினூடாக அறியத் தருகிறோம். Cut என்ற ஒரு ஜெர்மனியத் திரைப்படம் இனப்படுகொலையின் பின்னணியைக் கொண்டு வெளிவந்

## அடையாள அழிப்பு

ஆர்மீனிய இனப்படுகொலைகள் நிகழ்ந்த காலத்திலும் பின்னருமாக இப்போது துருக்கியின் கிழக்கிலுள்ள பூர்வ ஆர்மீனிய மண்ணில் 2500 ஆர்மீனியத் தேவாலயங்களும் மடாலயங்களும் 1800 பாடசாலைகளும் அழிக்கப்பட்டன.



Diyarbakir - St. Giragos தேவாலயம்

3600 க்கும் மேற்பட்ட ஆர்மீனிய மொழிப் பெயர்கள் கொண்ட கிராமங்கள், நகரங்களின் பெயர்கள் துருக்கிமயமாக்கப்பட்டுவிட்டன. ஆறுகள், மலைகள், குளம், குட்டைகளும் அடையாள அழிப்பிலிருந்து தப்பவில்லை. இத்தனை அடையாள அழிப்பையும் தாண்டி, துருக்கியின் கிழக்கேயுள்ள 9 நகரங்களின் நகர முதல்வர்கள் தங்களின் முன்னோர் ஆர்மீனியர்கள் என்றறிந்து ஆர்மீனியாவுக்குப் பயணமொன்றை மேற்கொண்டு தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்திச் சென்றிருக்கின்றனர்.

## Genocide Remembrance, Condemnation and Prevention Month

ஏப்பிரல் மாதத்தை, இனப்படுகொலையை நினைவுகூருவதற்கும் கண்டிப்பதற்கும் தடுப்பதற்குமான மாதமாகவும் ஏப்பிரல் 24ம் நாளை ஆர்மீனிய இனப்படுகொலை நினைவு நாளாகவும் கனடிய நாடாளுமன்றம் அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடு பிரகடனம் செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. Mississauga-Streetsville தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் Brad Butt அவர்கள் மார்ச் 25ம் நாள் சமர்ப்பித்த தனிநபர் பிரேரணையே ஒரு மாத காலத்திலேயே தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஏப்பிரல் 24, 1915 இல் இனப்படுகொலையின் தொடக்கமாக ஆன்மீகத் தலைவர்கள், கல்விமான்கள், சமூகத் தலைவர்கள் துருக்கியரால் கடத்தப்பட்ட நூற்றாண்டு நினைவு நாளிலேயே கனடா இத்தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.



மீனிய இனப்படுகொலை' என்பதனை மறுதலித்துக் கட்டுரைகளை எழுதித்தள்ளுவது இவரது முக்கியமான வேலை. இருவரில் ஒருவர் உரையாற்றத் தொடங்க, அரங்கு நிறைய அமர்ந்திருந்த மாணவர்களில் 15 – 20 பேர் தவிர்ந்த ஏனையோர் எழுந்து பேச்சாளருக்கு முதுகைக் காட்டியவண்ணம் நின்றனர். அமைதியான எதிர்ப்பு. கனடிய ஆர்மீனிய இளையோர் சம்மேளனமும் ஆர்மீனிய மாணவர் சங்கமும் இணைந்து கொடுத்த அடி. கேவலமான, இன இழிவுபடுத்தும் சொற்கள் மாணவர்களை நோக்கிச் சிலரால் வீசப்பட்டன. மாணவர்கள் அமைதி காத்தனர். பல்கலைக்கழகக் காவற்றுறையினர் வரவழைக்கப்பட்டனர். "விதிமுறைகளுக்கு மாறாக மாணவர்கள் எதையுமே செய்யவில்லை அவர்கள் அமைதியாகவும் இருக்கின்றனர். எதிர்ப்பை அமைதியாகக் காட்டும் உரிமை அவர்களுக்கு உண்டு" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டனர் காவற்றுறையினர். பின்னர் Bruce Fein பேசிமுடிக்கும்வரை நின்றுவிட்டு அமைதியாக வெளியேறினர் மாணவர்கள். இப்படியெல்லாம் காத்திரமாக, முகத்தில் அடிக்காமல் ஆனால் அடித்தது போல் எதிர்ப்பைக் காட்டலாம்.

அதே ரொறன்ரோ பல்கலைக் கழக சென். ஜோர்ஜ் வளாகத்தில் மார்ச் மாதம் ஒரு மாநாடு, இனப்படுகொலை பற்றிய மாநாடு. 'இனப்படுகொலைகளைத் தடுப்பது, அவற்றுக்கான நீதிக்கான போராட்டம்' பற்றிய இந்த மாநாட்டுக்கு 400 பேர் வரையில் சென்று மண்டபத்தை நிறைத்திருந்தனர். இனப்படுகொலை எனும் சுழற்சியில். 'இனப்படுகொலை நடக்கவில்லை' என்று மறுப்பது படுகொலைக்கு மேலும் எண்ணெய் ஊற்றுவது போலாகும் என்றொரு கருத்தும் முன்வைக்கப்பட்டிருந்தது. இம்மாநாட்டில் ஆர்மீனிய இனப்படுகொலையில் நிறைந்த தெளிவுள்ள பேராசிரியர்கள் உரை நிகழ்த்தினர்.

ஒரு பல்கலைக்கழக மாணவர் வன்கூவரின் 3 பல்கலைக்கழகங்களிலும் வன்கூவர் நகர மையத்திலும் 50 பேர் வீதம் கருத்துக் கேட்டார். இன்னும் இரு மாணவர்கள் உறுதுணை. இன, மத, மொழி, நிற, பால் வேறுபாடின்றி அனைவரிடமும் ஒரே கேள்வி. ஆய்வின் முடிவு - மூன்று பல்கலைக் கழகங்களிலும் இவர்கள் சந்தித்த 150 பேரில் 18% மாணவருக்கு ஆர்மீனியப் படுகொலைகள் பற்றி விபரமும் தெரிந்திருக்கிறது. 19% மாணவர் ஆர்மீனிய இனப்படுகொலை என்று கேள்விப்பட்டிருக்கின்றனர், வேறு விபரம் தெரியாது. 63% மாணவர் கேள்விப் பட்டதேயில்லை. வன்கூவர் நகரமையத்தில் இம்மாணவர்கள் சந்தித்த 50 பேரில் இது முறையே 22%, 26%, 52%. முடிவுகளை வைத்துக்கொண்டு மாணவர்கள் எடுத்த முடிவு - எங்களுக்குக் கிடைத்திருக்கின்ற எல்லாத் தொடர்பாடல் முறைகள் மூலமும் திரைப்படம், நாடகம், இசை போன்ற கலைகள் மூலமும் கல்வியியலாளர்கள், பாடசாலைகள், செய்தித்தாள்கள், விரிவுரைகள் பொதுப் பேரணிகள், விளம்பரப் பதாகைகள், சமூக ஊடகங்கள் மூலமும் இன்னமும் ஆர்மீனிய இனப்படுகொலைகள் பற்றி உலகுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இதுதான் மாணவர் சக்தி, பெருமூச்சு விடத்தான் முடிகிறது எம்மால்.

ரொறன்ரோ பொது நூலக ரொறன்ரோ பல்கலைக்கழகக் கிளையிலும் Fairview கிளையிலும் ஆர்மீனிய இனப்படுகொலை தொடர்பான நூல்களின் கண்காட்சியும் ஏப்பிரல் மாதம் முழுவதுமே நடைபெற்றது. நூல்கள் மூலம் இனப்படுகொலை பற்றிய செய்தியும் தெரியாதோருக்கும் சென்று சேரக்கூடிய வாய்ப்புகளை நாம் தான் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

ஒட்டாவாவிலிருந்து திரும்பிவரும் போது பேருந்தில் அருகே அமர்ந்திருந்தவர் பொப் றே அவர்கள் ஒன்ராறியோ முதல்வராயிருந்த போது இருந்த சபாநாயகர் David Warner. 1979ல் முதல் முதலில் ஆர்மீனிய சமூக மையத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வுக்குச் சென்றதாகவும் அப்போது ஆர்மீனியரின் வரலாற்றுத் துயரம் எதுவுமே தனக்குத் தெரியாதெனவும் கூறினார். அடுத்த ஆண்டே ஆர்மீனிய சமூக நிகழ்வொன்றில், "ஆர்மீனியர் மீது நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலைதான்" என்று தான் உரையாற்றியதாகவும் சொன்னார். தமிழர்களும் ஓயாது சலித்துப்போகாது ஓர்மத்தோடு பரப்புரைகளைத் தொடரவேண்டும் என்பது அவரது எதிர்பார்ப்பு.

ஆர்மீனியப் படுகொலை நிகழ்ந்த 100 ஆண்டுகளுக்கு முன்னர் தொழினுட்ப வசதிகள், தொடர்பாடல் முறைமைகள் தத்தித் தவழ்ந்து கொண்டிருந்த காலம். ஆனாலும் தகவல்களை, ஆவணங்களை, சாட்சியங்களை ஒன்றுதிரட்டி இன்னமும் நீதிவேண்டிப் போராடிக்கொண்டிருக்கிறது ஒரு சமூகம். இன்னோர் இனப்படுகொலை, தொழினுட்ப வசதிகள், தொடர்பாடல் முறைகள் உச்சம் பெற்றிருக்கும் காலத்தில் 6 ஆண்டுகளுக்கு முன் எங்கள் உறவுகள் மீது நடத்தப்பட்டது. போரில் நடந்த கொடுமைகளுக்குக் கண்கண்ட காட்சிகள் பலர் உள்ளனர்.கொலைக்கரங்களிலிருந்தும் கொலைக் களங்களிலிருந்தும் தப்பிப் பிழைத்தோர் ஆயிரக் கணக்கில் உள்ளனர். ஒளிப்பதிவுகள், நிழற்படங்கள் என்று சாட்சியங்கள் ஆயிரக்கணக்கில் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தனை சாட்சியங்கள் இருந்தும் தலைமைத்துவக் கனவில் மிதப்போர் எதையாவது முறையாக ஆவணப்படுத்துகிறார்களா என்றால்... விடையில்லை.

ஆர்மீனியர்களும் யூதர்களும் இனஅழிப்பு ஆவணப்படுத்தலில் சிறந்த எடுத்துக்காட்டுகளாக அமைகிறார்கள். எம்மினம் அழிக்கப்பட்டதை இனப்படுகொலை என்று சொல்லவே ஏதோ சொல்லக்கூடாத சொல்லைச் சொன்னதுபோல் நாம் பதறித் துடிதுடித்துப் போகிறோம். அப்படிச் சொல்லி யாரையுமே கோபப்படுத்தக்கூடாதாம்.

"ஆர்மீனியரின் அழிவைப் பற்றி இப்போது யார் பேசுகிறார்கள்?" என்று யூதர்களை அழித்த காலத்தில் ஹிட்லர் சொன்னதாக ஒரு கூற்று உண்டு. கொஞ்சக்காலம் போக அழிக்கப்பட்டவர்களின் பக்கமும் மறந்துவிடும். பார்த்துக் கொண்டிருந்தவர்களும் மறந்துவிடுவர் என்றுதான் ஹிட்லர் கருதியிருப்பார்.

மறப்போமா? மறவோமா?

**உசாத்துணை:**

- http://armeniangenocide100.org/en/
- http://genocidecentennial.ca/
- Toronto Hye Monthly (Toronto Armenian Community Newspaper) March & April 2015
- Ardziv, (The Official Publication of the Armenian Youth Federation of Canada) 2015 – Vol - 1
- 1915 AGHET - The Armenian Genocide (விவரணப் படம், YouTube)
- The Armenian Journey - A Story Of An Armenian Genocide (விவரணப் படம், YouTube)
- The History of the Armenian Genocide, Ronald Grigor Suny, Princeton University Press
- அனைத்துலக, ஆர்மீனியச் செய்தி இணையத் தளங்கள்



gangatharan.k@thaiveedu.com

## துருக்கி பதில் சொல்லியே ஆகவேண்டும்

### - கிரக் சிற்றிலியான்

திருக்கிறது. ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்டு வெளியானது. சில நாட்களுக்கு முன் இனப்படுகொலை நூற்றாண்டை முன்னிட்டு Fairview Mall – Cineplex திரையரங்கில் ஒரு காட்சி திரையிடப்பட்டது. இரண்டாவது காட்சிக்கான அனுமதி மாலை 5:00 மணியளவிலேதான் கிடைத்தது. 3-4 மணிநேரத்தில் அதற்கான நுழைவுச்சீட்டுகளும் விற்றுத்தீர்ந்துவிட்டன. மேலும் Pomegranate Film Festival – சுருக்கமாக Pom Film Festival என்று ஒரு நிகழ்வு நடத்துகிறோம். இங்கும் ஆர்மீனியரின் வாழ்வு, வரலாறு, துயரத்தைப் பதிவுசெய்த படங்களைத் திரையிடுகிறோம். Pomegranate என்பது மாதுளம்பழம். ஆர்மீனியர்களின் வாழ்வில் மாதுளம்பழம் மறக்கமுடியாதது. பாலைவனம் நோக்கி நடத்திச் செல்லப்படும்போது கையில் எதையுமே கொண்டுசெல்லமுடியாது. ஆனாலும் அன்னையர், பெண்கள் மாதுளம்பழங்களை மறைத்து எடுத்துக் கொண்டு சென்றனர். குழந்தைகள் பசியாலும் தாகத்தாலும் தவிக்கும்போது 2-3 மாதுளை முத்துகளைக் குழந்தைகளின் வாயில் வைத்துவிடுவர். பசியாறுவதற்கல்ல அந்த மாதுளை முத்துகள்... உயிரைப் பிடித்து வைத்துக் கொள்வதற்கு. எமது வாழ்வின் முக்கியமான துயர் செறிந்த ஒரு நிகழ்வை நினைவூட்டியபடியே இருக்கும் Pom Film Festival.

அற்றம் எகோயன் சர்வதேசப் பிரபலம். இவர் எடுக்கும் படங்களை உலகம் உன்னிப்பாகக் கவனிப்பதைப் போலவே ஆர்மீனிய இளையோரும் இவர் சொல்வதைக் கவனமாகக் கேட்கின்றனர். அவரது குரல் எல்லா இடமும் செல்கிறது. அதனாலே தான் அவர் எங்கள் சிறப்புப் பேச்சாளராக நேற்று அழைக்கப்பட்டிருந்தார்.

**ஈழத்தில் வடமாகாண சபையும் இந்தியாவில் தமிழ்நாடு சட்டமன்றமும் கனடாவில் மார்க்கம் நகரசபையும் ஈழத்தில் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்டது இனப்படுகொலை எனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன. இன்னமும் இனப்படுகொலை வெவ்வேறு வடிவங்களில் தொடர்ந்த வண்ணமேயுள்ளது. நாம் ஈழத்தமிழர்கள் பல்வேறு நாடுகளிடமும் அமைப்புகளிடமும் ஈழ மக்கள் மீது நடந்தது இனப்படுகொலை என்று அங்கீகரிக்குமாறு கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறோம். இந் நிலையில் இனப்படுகொலை அங்கீகாரம் கோரிய இந்தப் போராட்டத்தில் ஈழத் தமிழ் மக்களுக்கு, இனப்படுகொலைக்கு உள்ளானோரின் வழித்தோன்றல்களாக உங்கள் அறிவுரை என்ன?**

மிகச் சிக்கலான, கடினமான விடயம் இது. நீங்கள் மனம் தளரக்கூடாது தொடர்ச்சியாக வலியுறுத்தியபடியே இருக்கவேண்டும். சமூகம் முழுமையாக ஈடுபடவேண்டும். ஒவ்வொரு சமூக நிகழ்விலும் நடந்தது இனப்படுகொலை என்பது வலியுறுத்தப்பட வேண்டும். முதலில் மாகாண மட்டத்தில் ஆரம்பிக்கலாம். ஆர்மீனிய இனப்படுகொலைத் தீர்மானத்தை ஒன்ராறியோ மாகாண அரசு 1980ல் நிறைவேற்றியது. கனடிய அரசு அதே தீர்மானத்தை 24 ஆண்டுகள் கழித்துத்தான் நிறைவேற்றியது. உடனடியாக எதுவும் நடந்துவிடாது. பொறுமையாகப் போராடவேண்டும். 11 ஆண்டுகளில் 4-5 தடவைகள் கனடிய நாடாளுமன்றத்தில் இனப்படுகொலைத் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு முயன்றார் கனடிய ஆர்மீனியர்கள் மத்தியில் முதலாவது நாடாளுமன்ற உறுப்பினரான Sarkis Assadourian. செனற்றர் ஒருவர் 6-7 தடவை முயன்று. செனற்றர்கள் பலரோடு பேசிப்பேசிச் சம்மதிக்கவைத்ததன் பலன் 2002ல் செனற் சபை இனப்படுகொலைத் தீர்மானத்தை நிறைவேற்றியது. ஆர்மீனியப் படுகொலை நடந்து ஏறத்தாழ 90 ஆண்டுகளுக்குப் பிறகு கனடிய நாடாளுமன்றம் ஆர்மீனியர் மீது நடத்தப்பட்டது இனப்படுகொலை என்று 2004ல் ஏற்றுக்கொண்டது.

எனவே மனந்தளராதீர்கள். உறுதியோடிருங்கள். நாங்களும் உங்களோடிருக்கிறோம்.

• • •